மாண்புமிகு பேரவைத் தலைவர் : மானியக் கோரிக்கைகளும், வெட்டுத் தீர்மானங்களும் பேரவைமுன் விவாதத்திற்காக வைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு நிதியமைச்சர், தன்னுடைய முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம்.

பிற்பகல் 12-55

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மானியக் கோரிக்கைகள் எண்கள் 7,8,9, 41, 42, 60 மற்றும் 61 ஆகியவை பற்றிய குறிப்புகள் அவைமுன் வைக்கப்பட்டிருக்கின்றன. அவற்றில் தமிழில் வைக்கப்பட்டுள்ள கொள்கைக் குறிப்புகளை @ நான் இந்த அவையில் படித்ததாகக் கொண்டு அவைக் குறிப்பேட்டில் அவற்றைப் பதிவு செய்யுமாறு கேட்டுக் கொள்கிறேன். விவாதத்தில் கலந்து கொள்ளும் மாண்புமிகு உறுப்பினர் பெருமக்கள், தத்தம் கருத்துக்களைக் கூறிய பிறகு, இறுதியாக என்னுடைய கருத்துக்களைக் கூறுகிறேன்.

9. விதி 110-ன் கீழ் முதலமைச்சரின் அறிக்கை

பால் கொள்முதல் விலை உயர்வு குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; விவாதம் தொடங்குவதற்கு முன்னர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சட்டமன்றப் பேரவை விதி 110-ன் கீழ் ஒரு முக்கிய அறிவிப்பைப் பேரவைக்கு வெளியிட அனுமதி கோரியிருக்கிறார். அவருக்கு அனுமதி வழங்கப்பட்டு இருக்கிறது. பேரவையில் அந்த அறிக்கையை வைக்கக் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பால் பெருக்குத் திட்டத்தை மூன்று அடுக்கு 'ஆனந்த்' பாணியில் செயல்படுத்துவதற்காக கிராம அளவில் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களும், மாவட்ட அளவில் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்களும், மாநில அளவில் கூட்டுறவு இணையமும் அமைக்கப்பட்டுள்ளன. இத்திட்டத்தின் மூலம் பால் உற்பத்தியைப் பெருக்குவதும், பால் உற்பத்தியாளர்களுக்கு லாபகரமான, அதாவது கட்டுப்படியான விலையை அளிப்பதும், நகரங்களில் வாழ்கிற மக்களுக்குத் தரமான பாலை, நியாயமான விலையில் விற்பதும் இந்த அரசின் கொள்கையாகும்.

@ பக்கம் 1041 முதல் 1087 முடிய இணைப்புகள் I, II, III மற்றும் IV ஆக அச்சிடப்பட்டுள்ளன.

1993 ஏப்ரல் 27] [டாக்டர் ஜெ. ஜெயலலிதா]

1992–93 ஆம் ஆண்டு சென்னையில், நாள் ஒன்றுக்கு 7.32 லட்சம் லிட்டர் பால் விற்பனை செய்யப்பட்டது. அதற்கு முந்தைய ஆண்டான 1991–92-ஆம் ஆண்டு, சராசரி தினம் 6.82 இலட்சம் லிட்டர் பால் விற்பனை செய்யப் பட்டது. தமிழ்நாட்டில் பால் பெருக்குத் திட்டங்கள் பலவற்றைத் தீட்டி, அதனை நடைமுறைப்படுத்துவதன் மூலமாக, பால் உற்பத்தியை அதிகரிப்பதற்கு எல்லா நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வரும் இந்தச் சூழ்நிலையில், பால் உற்பத்தியாளர்கள் தாங்கள் கொடுக்கும் பாலுக்கு வழங்கப் படும் கொள்முதல் விலையை உயர்த்த வேண்டும் என்று சில காலமாகக் கேட்டுக் கொண்டு வருகிறார்கள். பால் உற்பத்தியாளர்களிடம் இருந்து கொள்முதல் செய்யப்படும் பாலின் கொள்முதல் விலை இறுதியாக 1-5-1992 அன்று திருத்தியமைக்கப்பட்டது. அதன் பின்னர் இன்றுவரை கொள்முதல் விலையில் எந்தவிதமான மாற்றமும் செய்யப்படவில்லை.

அந்த திருத்தியமைக்கப்பட்ட கொள்முதல் விலையின்படி ஒரு கிலோ மொத்த சத்துகள் (Total Solids) கொண்ட பசும் பாலுக்கு 36 ரூபாய் 15 காசுகளும், ஒரு கிலோ கொழுப்புச் சத்து கொண்ட எருமைப்பாலுக்கு 90 ரூபாயும் வழங்கப்பட்டு வருகிறது. அதாவது, இந்தத் திட்டத்தின்கீழ் ஒரு லிட்டர் பசும் பாலுக்கு 4 ரூபாய் 70 காசுகளும், ஒரு லிட்டர் எருமைப் பாலுக்கு 6 ரூபாய் 30 காசுகளும், கொள்முதல் விலையாக உற்பத்தியாளர்களுக்கு வழங்கப்படுகிறது.

கடந்த சில மாதங்களாக தமிழக பால் உற்பத்தியாளர்கள் மாட்டுத் தீவனம் மற்றும் பராமரிப்புச் செலவுகள் உயர்ந்து இருப்பதைச் சுட்டிக் காட்டி பால் கொள்முதல் விலையை சிறிதளவு உயர்த்தித் தரவேண்டும் என்று கோரிக்கை விடுத்தனர். இந்தக் கோரிக்கையைக் கனிவுடன் பரிசீலனை செய்து அதில் உள்ள நியாயத்தை உணர்ந்து தமிழ்நாடு பால் உற்பத்தியாளர் கூட்டுறவு இணையம் மற்றும் அதைச் சார்ந்த மாவட்ட பால் உற்பத்தியாளர் ஒன்றியங்கள், உற்பத்தியாளர்களுக்குக் கொடுக்கும் கொள்முதல் விலையை உயர்த்திக் கொடுப்பதற்கு அரசு கொள்கை முடிவு எடுத்துள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி).

இந்தக் கொள்கை முடிவின்படி ஒரு கிலோ மொத்த சத்துகள் கொண்ட பசும்பாலுக்கு 36 ரூபாய் 15 காசிலிருந்து 42 ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) அதேபோல், ஒரு கிலோ கொழுப்புச் சத்து கொண்ட எருமைப் பாலுக்கு 90 ரூபாயிலிருந்து 96 ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த

கொள்முதல் விலை உயர்வினால் பால் உற்பத்தியாளர்களுக்கு ஒரு லிட்டர் பசும் பாலுக்கு 4 ரூபாய் 70 காசுகள் என்பதை உயர்த்தி 5 ரூபாய் 50 காசுகள் என்றும் (மேசையை தட்டும் ஒலி) ஒரு லிட்டர் எருமைப் பாலுக்கு 6 ரூபாய் 30 காசுகள் என்பதை உயர்த்தி 6 ரூபாய் 75 காசுகளாக வழங்கப்படும் என்பதைப் பெருமகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த கொள்முதல் விலையேற்றம் 1-5-1993 முதல் நடைமுறைப் படுத்தப்படும். இந்த கொள்முதல் விலை உயர்வு, பல பால் உற்பத்தியாளர்கள் தனியாருக்குப் பால் வழங்குவதைத் தவிர்த்து, கூட்டுறவுச் சங்கங்களுக்கு மேலும் கூடுதலாகப் பால் வழங்குவதற்குத் தூண்டுகோலாக அமையும். எனவே, பால் கொள்முதல் கணிசமான அளவு உயரும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த கொள்முதல் விலை ஏற்றத்தினால் தமிழ்நாட்டில் உள்ள 5 இலட்சம் பால் உற்பத்தியாளர்கள் பயன் பெறுவார்கள் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

8. மானியக் கோரிக்கைகள், 1993–94, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி.

(அ) கோரிக்கை எண் 9—மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள்.

(ஆ) கோரிக்கை எண் 7—மாநிலச் சட்டமன்றம்.

(இ) கோரிக்கை எண் 8—தேர்தல்கள்.

(ஈ) கோரிக்கை எண் 41—ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வு கால நன்மைகளும்.

(உ) கோரிக்கை எண் 42—பல்வகை.

(ஊ) கோரிக்கை எண் 60—பல்வகை மூலதனச் செலவு.

(எ) கோரிக்கை எண் 61—மாநில அரசு வழங்கும் கடன்களும் முன்பணங்களும்.

பிற்பகல் 1–00

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> மானியக் கோரிக்கைகள் மீது விவாதம் தொடங்குகிறது. பேரவை விதிகளின்படி இன்று விவாதமும், பதிலுரையும் முடிக்கப்பட்டு, மானியக் கோரிக்கைகள் பிற்பகல் 1-30 மணிக்கு வாக்கெடுப்புக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும். எனவே, விவாதத்தில்